**செய்தி வெளியீடு எண்: 427** **நாள்: 03.07.2018**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 2.7.2018 அன்று தலைமைச் செயலகத்தில், உள்துறை சார்பில் விழுப்புரம் மாவட்டம், வேடம்பட்டில் 9 கோடியே 6 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள விழுப்புரம் மாவட்ட சிறைச்சாலை, புதுக்கோட்டை மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் 4 கோடியே 72 லட்சத்து 4 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 40 சிறைத்துறை குடியிருப்புகள் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள். மேலும், காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் 117 கோடியே 78 லட்சத்து 66 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இரண்டு அரசு சட்டக் கல்லூரிகளை திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 10.5.2013 அன்று சட்டப்பேரவை விதி எண் 110–ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், ‘‘தமிழ்நாட்டில் 9 மத்திய சிறைகள், 10 மாவட்ட சிறைகள், என மொத்தம் 19 மாவட்டங்களில் சிறைகள் உள்ளன. மீதமுள்ள மாவட்டங்களில் மாவட்ட சிறைகள் அமைக்கப்படுவது அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, முதல் கட்டமாக திருப்பூர், தருமபுரி மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் மாவட்ட சிறைச்சாலைகள் அமைக்கப்படும்’’ என்று அறிவித்தார்கள்.

அதன்படி, விழுப்புரம் மாவட்டம் – வேடம்பட்டில் 9 கோடியே 6 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாவட்ட சிறைச்சாலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள். விழுப்புரம் மாவட்ட சிறைச்சாலை 5.26 ஏக்கர் பரப்பளவில், 200 கைதிகளை அடைக்கும் வசதியுடன் கட்டப்பட்டுள்ளது.

மேலும், சிறைத்துறை சார்பில் புதுக்கோட்டை மாவட்டம் – புதுக்கோட்டையில் 10 குடியிருப்புகள் மற்றும் திருநெல்வேலி மாவட்டம் – பாளையங்கோட்டையில் 30 குடியிருப்புகள், என மொத்தம் 4 கோடியே 72 லட்சத்து 4 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 40 சிறைத்துறை குடியிருப்புகளையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

சட்டத் துறை சார்பில், நீதியரசர் திரு. ப. சண்முகம் விசாரணை ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையிலும், சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவினை செயல்படுத்தும் விதமாகவும், சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியை இடமாற்றம் செய்து, காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் வட்டம், புதுப்பாக்கம் கிராமத்தில் 6.30 ஹெக்டேர் நிலப்பரப்பில், 57 கோடியே 41 லட்சத்து 54 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில், நிர்வாகக் கட்டடம், வகுப்பறைகள், நூலகம், மாணவ, மாணவியர் விடுதிகள், மாதிரி நீதிமன்றம் மற்றும் கலையரங்கம் ஆகியவை ஐந்தாண்டு சட்டப் படிப்பு பயிலும் 1205 மாணாக்கர்கள் பயன்பெறும் வகையிலும்; திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், பட்டறைப் பெரும்புதூர் கிராமத்தில், 20 ஹெக்டேர் நிலப்பரப்பில், 60 கோடியே 37 லட்சத்து 12 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் நிர்வாகக் கட்டடம், வகுப்பறைகள், நூலகம், மாணவ, மாணவியர் விடுதிகள், மாதிரி நீதிமன்றம் மற்றும் கலையரங்கம் ஆகியவை மூன்றாண்டு சட்டப் படிப்பு மற்றும் சட்டமேற்படிப்பு பயிலும் 1123 மாணாக்கர்கள் பயன்பெறும் வகையிலும் கட்டப்பட்டுள்ள அரசு சட்டக் கல்லூரிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள். இப்புதிய அரசு சட்டக் கல்லூரிகள் 2018–2019-ஆம் கல்வியாண்டு முதல் செயல்படத் தொடங்கும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.சி.வி. சண்முகம், மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு.பா.பெஞ்ஜமின், மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் திரு.க. பாண்டியராஜன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., சட்டத்துறை செயலாளர் திரு.சு.ச. பூவலிங்கம், சிறைத்துறைத் தலைவர் திரு.அசுதோஷ் சுக்லா, இ.கா.ப., தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு.எம்.என்.மஞ்சுநாதா, இ.கா.ப., சட்டக் கல்வி இயக்குநர் முனைவர் என்.எஸ். சந்தோஷ் குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 3.7.2018**